வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 10-10-2026 நேரம் : மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழகத்தில், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நாளை சென்னை வருகிறார்.

மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சைகள் கிடைக்க வேண்டும் என்று, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

ஜோத்பூரில், நடைபெறும் தரங் சக்தி விமானப் படை பயிற்சியின் இன்றைய நிகழ்வுகளில், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார்.

இயற்கைக்கு இழைக்கப்படும் எந்தவொரு தீங்கும், மனித குலத்திற்கு எதிரான செயலாகும் என்று, வனவிலங்கு புகைப்பட கலைஞர் AZIZ MAHE கூறியுள்ளார்.

---------------------------

## மோடி-தமிழகம் (15)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நாளை சென்னை வருகிறார். 14.5 கிலோ மீட்டர் தூர பூந்தமல்லி-வடபழனி மெட்ரோ ரயில் சேவையை நாளை தொடக்கி வைக்கிறார். அமிர்த பாரத் நிலையங்கள் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் புனரமைக்கப்பட்ட பழனி, பரமகுடி, நாமக்கல், அம்பாசமுத்திரம் உள்ளிட்ட ரயில் நிலையங்களை, காணொலிக் காட்சி மூலம் அவர் திறந்து வைக்கிறார். கோவை பகுதிக்கான 700 கோடி ரூபாய் ரயில்வே திட்டங்களையும், மெய்நிகர் முறையில் பிரதமர் தொடக்கி வைக்கிறார். சென்னையில், பூந்தமல்லியில் இருந்து, மெட்ரோ ரயில் போக்குவரத்தை தொடக்கி வைக்கும் பிரதமர், போரூர்-பூந்தமல்லி இடையே, மெட்ரோ ரயிலில் பயணம் மேற்கொள்கிறார். சென்னை இந்திய தொழில்நுட்ப

கல்விக் கழகத்தில், மூளை ஆராய்ச்சி மையத்தை பார்வையிடும் திரு. மோடி, சென்னை வர்த்தக மையத்தில், பல்வேறு நலத்திட்டங்களை தொடக்கி வைக்கிறார். பிரதமரின் சென்னை வருகையையொட்டி, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, போக்குவரத்திலும் மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன.

----------------------------

## மக்கள் சேவை மூலமான தேச சேவை 1 (12)

**மக்கள் சேவை மூலமான தேச சேவை** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் **சேவைப் பயணம்,** இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. **சேவை மற்றும் நல்லாட்சி** என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. **அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி - அனைவருக்கும் சமூக அதிகாரம்** என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. **சேவா சங்கல்ப் அபியான்** என்னும், **இந்த சிறப்பு தொடரில் இன்று விண்வெளித் துறையில் சீர்திருத்தங்கள் குறித்து** காண்போம்...

**(வாய்ஸ்)**

மக்கள் சேவை மூலமான தேச சேவை 2 (16)

(வாய்ஸ்)

2020ஆம் ஆண்டிற்கு முன், விண்வெளி நடவடிக்கைகளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் மட்டுமே மேற்கொண்டிருந்தது. இத்துறையில், தனியார் பங்கேற்புக்கு தடை ஏதும் இல்லை என்றாலும், இதற்கென அனுமதி வழங்கவோ, அலை வரிசையை ஒதுக்கவோ, அல்லது, சோதனை செய்யும் வசதிகளை வழங்கவோ, எந்த அதிகார அமைப்பும் இல்லாமல் இருந்தது. இதனால், தனியார் நிறுவனங்கள் முன்னேறுவதற்கு வழியின்றி இருந்தன. 2020ஆம் ஆண்டு, IN-SPACe விண்வெளித் துறையின் கீழ், ஒரு தன்னாட்சி ஒற்றைச் சாளர அமைப்பாக உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு, தனியார் நிறுவனங்கள், செயற்கைக் கோள்களை விண்ணிற்கு ஏவவும், இதற்கென இஸ்ரோவின் வசதிகளை பயன்படுத்திக் கொள்ளவும், வழிவகை செய்கிறது. மேலும், உதிரி

பாகங்கள் தயாரிப்பில் இருந்து, தரவுகளை விற்பனை செய்வது வரை, அனைத்து செயல்பாடுகளையும் ஒழுங்குப்படுத்தி, ஊக்குவிக்கிறது. IN-SPACe உருவாக்கப் பட்டதன் மூலம், இந்திய விண்வெளி புத்தொழில் நிறுவனங்கள் தற்போது ஏவு வாகனங்கள், மற்றும், செயற்கைக் கோள்களை வடிவமைத்து உருவாக்குகின்றன.

## மக்கள் சேவை மூலமான தேச சேவை 3 (5)

மேலும், புவி கண்காணிப்பு சேவைகளை வணிக ரீதியிலும் விற்பனை செய்கின்றன. இஸ்ரோவின் சொந்தப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தனியார் நிறுவனங்களும், தங்களது வழக்கமான பணிகள், மற்றும், கண்டுபிடிப்புகளுக்கு, விண்வெளியை ஒரு சிறந்த தளமாக பயன்படுத்தி வருகின்றன என்றார் அது மிகையில்லை.

-----------------------------

## உலக மன நல தினம்-நட்டா (13)

உலக மன நல தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது. மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சைகள் கிடைக்க வேண்டும் என்று, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார். மன நலம் குன்றியவர்கள், ஆரம்ப நிலையிலேயே சிகிச்சைகள் எடுப்பது குறித்து, தொலை மருத்துவ மையங்கள், உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதாகவும் அமைச்சர் கூறினார். 36 மாநிலங்கள், மற்றும், யூனியன் பிரதேசங்களில், 48 லட்சம் பேருக்கு, 53 தொலை மருத்துவ மையங்கள் மூலம், ஆலோசனைகள் வழங்கப் பட்டுள்ளதாகவும், திரு. நட்டா தெரிவித்தார். உண்மையான குரல்கள்-உண்மையான மாற்றம் என்பதை கருப்பொருளாக கொண்டு, இந்த ஆண்டின் மன நல தினம் கடைபிடிக்கப் படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் அச்சமின்றி சிகிச்கைகளை மேற்கொள் ஏதுவாக, நமது சமுதாயம் ஆதரவுடனும், பரிவுடனும் இருக்க வேண்டியது அவசியம் என்றும், அவர் வலியுறுத்தினார்.

-----------------------------

## நோபல் பரிசு (14)

இவ்வாண்டு அமைதிக்கான நோபல் பரிசுக்கு, இந்திய வம்சாவளியை சேர்ந்த தென்னாப்பிரிக்க நீதிபதி, திருமதி நவி பிள்ளை தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். அவருக்கு மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை

இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார். மனித உரிமைகள் மற்றும் நீதியை நிலை நாட்டுவது, சர்வதேச அளவில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை திருமதி நவநீதம் பிள்ளை வழங்கி உள்ளதாக, அவர் தமது சமூக ஊடகப் பதிவில் கூறியுள்ளார். மேலும், தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர், சர்வதேச அளவில் இத்தகைய உயரங்களை எட்டி இருப்பது, உலக தமிழர்களுக்கு பெருமை சேர்ப்பதாகவும் டாக்டர் முருகன் தெரிவித்துள்ளார்.

அமைதி, மற்றும், சர்வதேச சட்டங்களை ஊக்குவிப்பதில் ஆற்றிய முக்கிய பங்களிப்புகளுக்காக, அவருக்கு இந்த விருது வழங்கப் படுகிறது என்பதும், இவ்வாண்டு, அமைதிக்கான நோபல் பரிசின், 125ஆம் ஆண்டாக அமைவதும் குறிப்பிடத்தக்கது.

----------------------------

## ஐ.நா சபை (7)

அணு ஆயுத அச்சுறுத்தல்களால் பின்வாங்கப் போவதில்லை என்றும், எந்தவொரு பயங்கரவாத தாக்குதலுக்கும், தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று இந்தியா பாகிஸ்தானை எச்சரித்துள்ளது. ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத குறைப்பு மாநாட்டிற்கான, இந்தியாவின் நிரந்தர தூதுக் குழுவின் மூத்த ஆலோசகர் திரு. அன்மோல் ஷெர் பேடி, கூறியுள்ளார். ஐக்கிய நாடுகள் பொது சபையின் முதல் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதை தெரிவித்தார்.

----------------------------

## ராஜ்நாத் 1 (4)

ஜோத்பூரில், கடந்த மாதம் 26ஆம் தேதி தொடங்கி, நடைபெற்று வரும் தரங் சக்தி விமானப் படை பயிற்சியின் இன்றைய நிகழ்வுகளில், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார். இதுகுறித்த கூடுதல் விவரங்கள்.....

(வாய்ஸ்)

## ராஜ்நாத் 2 (17)

(வாய்ஸ்)

<u>ஜோத்பூர் விமானப் படை தளத்தில், நடைபெற்ற வான்வழி சாகச நிகழ்ச்சிகளை கண்டு களித்த பின்னர், நிகழ்ச்சியில் பேசிய பாதுகாப்புத்</u>

துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், நவீன போர் முறை, மற்றும், உலகளாவிய பாதுகாப்பு ஒழுங்கில் ஏற்பட்டு வரும் பெரும் மாற்றங்களுக்கு இடையில், தனது அண்டை நாடுகளிலும், அதற்கு அப்பாலும் நிகழும் அனைத்து நிகழ்வுகளையும் இந்தியா உன்னிப்பாக கவனித்து வருவதாக, கூறினார். மேலும், ஆத்ம நிர்பர் பாரத் என்பது இந்தியாவை உலகத்திலிருந்து தனிமைப்படுத்துவது அல்ல என்றும், மாறாக, முக்கிய பாதுகாப்பு தொழில்நுட்பங்களை வடிவமைத்தல், உருவாக்குதல், உற்பத்தி செய்தல், பராமரித்தல், மற்றும், மேம்படுத்துதல் ஆகிய திறன்களை உள்ளடக்கியதே என்றும், அவர் தெரிவித்தார். கூட்டுறவில் சக்தி, என்ற கருப்பொருளில் நடைபெறும் இந்த பயிற்சியில், இந்தியா மட்டுமல்லாமல், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஐக்கிய அரபு அமீரகம், இலங்கை, மற்றும், வங்கதேசம் ஆகிய 7 நாடுகளின் விமானப் படைகளும் பங்கேற்றுள்ளன. F-35. Lightning Two, Rafale மற்றும், F-16, உள்ளிட்ட பல மேம்பட்ட போர் விமானங்களும், போக்குவரத்து, மற்றும், வானில் எரிபொருள் நிரப்பும் விமானங்களும், இந்த பயிற்சியில் இடம்பெற்றுள்ளன.

## ராஜ்நாத் 3 (7)

இப்பயிற்சியில் பங்கேற்கும் விமானப் படைகளுக்கு இடையே, ஒருங்கிணைந்த செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துதல், ராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், மற்றும், செயல்பாட்டு உத்திகளை எளிதாக பரிமாறிக் கொள்வதை நோக்கமாக கொண்டுள்ளது. மேலும், நட்பு நாடுகளுக்கு இடையே கூட்டுப் பயிற்சி, பரஸ்பர புரிதல், மற்றும், பாதுகாப்பு கூட்டாண்மைகளை வலுப்படுத்துவதற்கான ஒரு முக்கிய தளமாகவும், அமைந்துள்ள இப்பயிற்சி நாளை மறுநாள் 12ஆம் தேதி முடிவடைய உள்ளது.

----------------------------

## சைக்கிள்பேரணி (15)

94ஆவது பிட் இண்டியா இயக்கத்தின், சண்டேஸ் ஆன் சைக்கிள் நிகழ்ச்சி நாளை வாரணாசியில் நடைபெறுகிறது. நமோ காட் முதல், சம்பூர்ணானந்த் சமஸ்கிருத பல்கலைக்கழகத்தின் தீக்‌ஷா மண்டபம் வரை நடைபெறும் இந்நிகழ்ச்சியில், மத்திய விளையாட்டு, மற்றும் இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா பங்கேற்கிறார். வளர்ச்சி அடைந்த பாரத்திற்கான போதை இல்லா

இளைஞர்கள் என்ற கருப்பொருளில் நடைபெற உள்ள இந்த உடற் பயிற்சியில் இளைஞர்கள், தன்னார்வலர்கள், பொது மக்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்க உள்ளனர். இந்த கூட்டு பங்கேற்பின் மூலம், உடற்பயிற்சி என்பது ஒரு தினசரி அர்ப்பணிப்பு என்பதையும், ஆரோக்கியமான, வலிமையான, மற்றும் போதைப் பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதில், விளையாட்டு, மற்றும், உடற்பயிற்சிகள் முக்கிய பங்கு வகிக்க முடியும் என்று, வலியுறுத்தப்படுகின்றது. 2026 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற விளையாட்டு வீரர்களும் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

----------------------------

## மாஹே (17)

மாஹேயில், புகழ்பெற்ற புனித யாத்திரைத் தலமான புனித தெரசா பேராலயத்தில் நடைபெறும் வருடாந்திர திருவிழாக் கொண்டாட்டங்களை முன்னிட்டு, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக காவல் கண்காணிப்பாளர் திரு. தனசேகரன் அறிவித்துள்ளார். திருவிழாவின் முக்கிய நாட்களான அக்டோபர் 14 மற்றும் 15 ஆகிய நாட்களிலும், அத்துடன் பெருங்கூட்டம் எதிர்பார்க்கப்படும் மற்ற நாட்களிலும் போக்குவரத்து கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்படும். குற்ற சம்பவங்களை தடுக்கவும், தொடர் குற்றவாளிகளை அடையாளம் காணவும் ஒரு சிறப்பு குற்றப் பிரிவு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. திருவிழா பணிகளுக்காக புதுச்சேரியிலிருந்து கூடுதல் காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். 400-க்கும் மேற்பட்ட காவலர்கள் மட்டுமின்றி, தேசிய மாணவர் படை தேசிய சேவைத் திட்டம் மற்றும் ஆப்த மித்ரா தன்னார்வலர்களும் பாதுகாப்புப் பணிகள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மாஹே தேவாலயத்தின் முன்பாக ஒரு சிறப்பு கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மாஹே நகரம் முழுவதும் சிசிடிவி கண்காணிப்பு மற்றும் ட்ரோன் கண்காணிப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகவும், காவல் கண்காணிப்பாளர் திரு. தனசேகரன் செய்தியாளர்களிடம் கூறினார்.

----------------------------

## மாஹே (10)

மனிதர்கள் இயற்கையின் ஓர் ஒருங்கிணைந்த அங்கம் என்பதால், இயற்கைக்கு இழைக்கப்படும் எந்தவொரு தீங்கும், இறுதியில் மனித

குலத்திற்கு எதிரான செயலாகும் என்று, புகழ்பெற்ற வனவிலங்கு புகைப்பட கலைஞர் AZIZ MAHE கூறியுள்ளார். சுற்றுச் சூழல் அழிவு, இயற்கை பேரழிவுகள், மனிதர்கள், மற்றும், வனவிலங்குகளுக்கு இடையே ஏற்படும் மோதல்களுக்கு, மனிதர்களின் பேராசையும், அலட்சியமுமே முக்கிய காரணங்கள் என்று, அவர் இன்று, மாஹேயில் உள்ள மகாத்மா காந்தி அரசு கலைக் கல்லூரியில், விழாவில் ஒன்றில் இயற்கை, வனவிலங்கு மற்றும் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கில் பங்கேற்று, பேசுகையில் தெரிவித்தார்.

-----------------------------

## வானிலை (6)

காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக, இன்று கேரளம், மாஹே, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளில் கனமழை பெய்யும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஆந்திரப் பிரதேசம், ஜார்க்கண்ட், ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய பகுதிகளில் இடியுடன் கூடிய மின்னல் மற்றும் பலத்த காற்று வீசும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-----------------------------

## கிரிக்கெட் (10)

இந்திய-வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான, 3ஆவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி, நாளை இந்தூரில் நடைபெறுகிறது. 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில், இரு அணிகளும் தலா 1 போட்டியில் வெற்றி பெற்றுள்ளன.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற உலக பவுல் சேம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில், இந்தியாவின் Putul Sonowal வெண்கலப் பதக்கம் வென்று, வரலாற்று சாதனைப் படைத்துள்ளார். இப்போட்டியில் இந்தியா பதக்கம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.

தேசிய ஹாக்கி சேம்பியன் போட்டிகள் இன்று ஜான்சியில் தொடங்கின. வரும் 21ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில், தமிழகம், மஹாராஷ்ட்ரா உட்பட, 29 அணிகள் பங்கேற்றுள்ளன.

-----------------------------

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழகத்தில், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நாளை சென்னை வருகிறார்.

மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சைகள் கிடைக்க வேண்டும் என்று, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

ஜோத்பூரில், நடைபெறும் தரங் சக்தி விமானப் படை பயிற்சியின் இன்றைய நிகழ்வுகளில், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார்.

இயற்கைக்கு இழைக்கப்படும் எந்தவொரு தீங்கும், மனித குலத்திற்கு எதிரான செயலாகும் என்று, வனவிலங்கு புகைப்பட கலைஞர் AZIZ MAHE கூறியுள்ளார்.